2015 புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழ்

அன்றைய தினம் முதல் மார்கழி 31 ஆம் திகதி வரை

நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின்

முன்னேற்றம் மற்றும்

2016 ஆம் ஆண்டில் முன்னெடுப்பதற்கு

திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

இவ்வறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

**கௌரவ அமைச்சரிடமிருந்து .........**



ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு புதிதாகத் தாபிக்கப்பட்டு கடந்த குறுகியதொரு காலத்தினுள் பெறப்பட்ட முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றி தயாரிக்கப்படுகின்ற இச் செயலாற்றுகை அறிக்கைக்கு ஒரு செய்தியை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

2015 தை மாதம் 08 ஆம் திகதி பெறப்பட்ட வெற்றியின் பெறுபேறாக தாபிக்கப்பட்ட 100 நாள் அரசாங்கத்தின் கொள்கையை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிய வெற்றியைத் தொடர்ந்து தாபிக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் தொலைநோக்கையும் கொள்கைகளையும் யதார்த்தமாக ஆக்கிக்கொள்வதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் கௌரவ பிரதம அமைச்சரினதும் ஆசீர்வாதத்துடன் 2015 புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி இவ்வமைச்சு தாபிக்கப்பட்டது. இதற்கமைய சம்பிரதாய ரீதியில் வெறுமனே ஒரு அமைச்சு தாபிக்கப்படுவதற்குப் பதிலாக, புதியதொரு தொலைநோக்கையும் விஞ்ஞான ரீதியிலான அடிப்படையையும் கொண்டதாக ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு தாபிக்கப்பட்டதோடு, உண்மையிலேயே இவ்வமைச்சு அரச அலுவலர்களுக்கும் அதேபோன்று ஏற்புடைய அனைத்து தரப்பினர்களுக்கும் புதியதொரு அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கும் என நான் நம்புகிறேன்.

இதற்கமைய 2020 ஆம் ஆண்டில் எமது நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அமெரிக்க டொலர் இருபத்தைந்து பில்லியன் வரை அதிகரிக்கச் செய்வதற்கு, அதாவது இரண்டு மடங்காக ஆக்குவதை முன்னிட்டு ஆரம்பக் கைத்தொழில் துறையின் ஊடாக வழங்கப்பட வேண்டிய பங்களிப்பை குறைவின்றிப் பெற்றுக்கொடுத்தல் இவ்வமைச்சு தாபிக்கப்பட்டதன் அடிப்படைக் குறிக்கோளாகும். இதற்குத் தேவையான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முதன்மையானதொரு கடமைப்பொறுப்பாகும் என்பதோடு, அப்பணியை ஒரு அமைச்சென்ற வகையில் தனித்துச் செயற்படுத்த முடியாதென்பது எனது நம்பிக்கையாகும். ஆரம்பக் கைத்தொழில் என்பது மிகப் பெரியதொரு துறை முழுவதும் பரவியுள்ளதொரு விடயப்பரப்பாகும் என்பதோடு, அத்துறையினுள் தொடர்புபடுகின்ற மேலும் பல அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களைப் போன்றே தனியார் துறையின் தொழில்முயற்சியாளர்கள் பலரும் உள்ளனர். இதற்கமைய, இதனுடன் தொடர்புடைய ஏனைய கௌரவ அமைச்சர்களும் அதேபோன்று அனைத்து தரப்பினர்களுடனும் சிறந்த இணைப்பாக்கத்துடன் கூடியதாக அமைச்சை வழிநடத்துதல் எனது எதிர்பார்ப்பாகும்.

இதன் பொருட்டு ஏற்புடைய அனைத்து தரப்பினர்களுடனும் பங்கேற்பு அணுகுமுறையின் ஊடாக பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடியதாக செயலாற்றுதல் அத்தியாவசியமானதொரு காரணியாகும் என்பதோடு, அது நான் மேலே குறிப்பிட்டதைப் போன்றே இதுவரை காலமும் எமது நாட்டில் பிரயோகிக்கப்படுகின்ற அமைச்சுகள் தனித்துச் செயற்படுகின்ற சம்பிரதாயத்திற்கு இவ்வமைச்சு புதியதொரு அனுபவத்தைச் சேர்ப்பதாக அமையும்.

இப்பாரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக எனது அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பணியாட்டொகுதியினர் மேற்கொள்ளும் முயற்சியை பாராட்டுதல் வேண்டுமென்பதோடு, புதியதொரு அமைச்சு என்ற வகையில் தாபிக்கப்பட்டுள்ள இவ்வமைச்சின் ஊடாக 2015 ஆம் ஆண்டின் கடந்த மூன்று மாதத்திற்கு அண்மித்த குறுகியதொரு காலத்தினுள் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் எதிர்கால திட்டமிடல்கள் தொடர்பில் எனது பாராட்டுகள் உரித்தாகும் என்பதை சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

தயா கமகே (பா.உ.)

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

## செயலாளரிடமிருந்து .......



2015 புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி புதியதொரு அமைச்சாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் மூலம் கடந்த குறுகிய காலத்தினுள் அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டமிடல்கள் தொடர்பில் தயாரித்து வெளியிடப்படுகின்ற இந்த செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை வழங்குவதற்கு இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன்.

2015 தை 08 மற்றும் ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற மாற்றங்களின் பெறுபேறுகளாக நிறுவப்பட்ட புதிய அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக தாபிக்கப்பட்ட அமைச்சுக்களில் உள்ளடங்கிய புதியதொரு அமைச்சு என்ற வகையில் இவ்வமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் கடமைகள் உண்மையிலேயே மாற்றமானவையும் சவால்மிக்கவையுமாகும். 60 மாதங்களினுள் புதியதொரு நாட்டை உருவாக்குகின்ற ஐந்து வகைக் கொள்கைகளை அரசாங்கத்தின் ஊடாக இட்டுச் செல்வதற்கு எதிர்பார்க்கின்ற இலக்குகளை அடையப்பெறுகின்றபோது ஆரம்பக் கைத்தொழில் துறையினுள் ஆற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்பு மிகப் பெரியதாகும்.

கமத்தொழில், கடற்றொழில் மற்றும் ஏனைய அனைத்துத் துறைகளிலும் ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளில் பொதுவாகக் காணக்கிடைக்கின்ற பிரச்சினைகளாக குறித்த உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தைக்கும் அதேபோன்று ஏற்றுமதிச் சந்தைக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றபோது மூலப்பொருட்களாக அல்லது பகுதியளவு தயாரிப்புப் பொருட்களாக அனுப்பப்படுதல் பிரதானமான பிரச்சினையாகும். அதன் மூலம் சந்தையினுள், குறிப்பாக ஏற்றுமதிச் சந்தையினுள் போட்டிக்கு முகம்கொடுக்கின்றபோது பெரும் பிரதிகூலமான நிலைமைகளை எதிர்கொள்வதற்கு அவ்வுற்பத்திகளுக்கும் அதேபோன்று தொழில்முயற்சியாளர்களுக்கும் நேரிடுகின்றது. இதன் காரணமாக பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை நாடு இழப்பதோடு, இது நாட்டின் தேசிய பொருளாதரத்துக்கு ஆரம்பக் கைத்தொழில் துறையிலிருந்து கிடைக்கின்ற பங்களிப்பு கீழ் மட்டத்தில் நிலவுதல் தொடர்பில் நேரடியாகவே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலைமையினுள் 2020 ஆம் ஆண்டில் எமது ஏற்றுமதி வருமானத்தை இரண்டு மடங்காக ஆக்குகின்ற இலக்கை நோக்கிச் செல்கின்றபோது ஆரம்பக் கைத்தொழில் துறையின் உற்பத்திகளின், குறிப்பாக ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளின் பெறுமதி சேர்க்கும் செயற்பாட்டை வலுப்படுத்துவதன் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புப் பொருட்களை உலகளாவிய சந்தைக்குச் சமர்ப்பித்து அதனூடாக உலகளாவிய சந்தையில் குறிப்பிடத்தக்கதொரு பகுதியை கைப்பற்றுவதன் மூலம் குறித்த இலக்கை நிறைவேற்றிக்கொள்வதற்கு அமைச்சின் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் பொருட்டு சிறப்பியல்பானதொரு வழிகாட்டல் எமது கௌரவ அமைச்சரிடமிருந்து எப்போதும் கிடைப்பதோடு, மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட சிரேஸ்ட அலுவலர்களும் ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரும் அதற்கு அயராது அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும், அமைச்சு தாபிக்கப்பட்டு கடந்த குறுகியதொரு காலத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் அதற்கு முற்றிலும் பங்களிப்புச் செய்த அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகின்ற அதேவேளை இவ்வறிக்கையைத் தயாரிக்கின்ற பணியில் ஈடுபட்ட பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) உள்ளிட்ட திட்டமிடல் பிரிவின் அலுவலர்களுக்கும் எனது நன்றி உரித்தாகின்றது.

பொறியியலாளர் பந்துல விக்கிரமாரச்சி

செயலாளர்

## உள்ளடக்கம்


ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு 01 - 11

பின்னணி மற்றும் அறிமுகம் 01 - 02

அமைச்சின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் 02

கடமைப்பொறுப்பு 03 - 04

அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி 04

அமைச்சின் ஒழுங்கமைப்பு வரைபடம் 05

அமைச்சின் முன்னேற்றம் 06 - 09

2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்கள் 09

பிரச்சினைகள் மற்றும் சவால்கள் 10 - 11

அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள்/ நிறுவனங்கள் 12

ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் 12 – 16

## ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு

### பின்னணி மற்றும் அறிமுகம்

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு எனும் பெயரிலான இப்புதிய அமைச்சு 2015 புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி புதிதாக தாபிக்கப்பட்டதோடு பத்தரமுல்லை 'சுஹுருபாய' கட்டடத்தில் 16 வது மாடியில் அதன் அலுவலகம் அமைந்துள்ளது. 2015 புரட்டாதி மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆரம்பக் கைத்தொழில் விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய விடயங்கள் இவ்வமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதானமான கடமைகளும் பணிகளும் ஆகும்.

மேலும், ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல், ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தல், கைத்தொழில் பாதுகாப்பை ஏற்படுத்தி விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சியாளர்களை உலகளாவிய பொருளாதாரத்தின்பால் ஆற்றுப்படுத்துவதற்கான கொள்கைகள், மூலோபாய வழிமுறைகளை வகுத்தல் ஆகியனவும் அமைச்சின் விடயப்பரப்புக்குரிய கடமைகள் மற்றும் பணிகளில் உள்ளடங்குகின்றன.

இதைத் தவிர, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் உள்ளடங்கலாக நிலைபேறான வளப் பயன்பாடு மற்றும் உயிரியல் பாதுகாப்புக்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மேலுமொரு பணியாகும்.

அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளில் கமத்தொழில் அபிவிருத்தி வலயங்கள் மற்றும் கடற்றொழில் ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களை தாபித்தல் மற்றும் இதனோடு இணைந்த கருமங்களும் சிறப்பியல்பான கடமைப்பொறுப்புகளாகும் எனக் குறிப்பிடலாம்.

இவ்வமைச்சு தாபிக்கப்படுகின்றபோது ஆரம்பக் கைத்தொழில் துறையிலும் அதேபோன்று குறிப்பாக கமத்தொழில் மற்றும் கடற்றொழில் துறையிலும் உற்பத்திகள் மற்றும் அவற்றின் ஏற்றுமதிகள் தொடர்பில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையில் ஆரம்பக் கைத்தொழில் துறையிலும் அதேபோன்று கமத்தொழில் துறையிலும் காணக்கூடியதாக உள்ள பல பிரச்சினைகள் உள்ளதோடு, இதில் எமது அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் வருகின்ற பிரச்சினையாக எமது ஆரம்பக் கைத்தொழில்கள், கமத்தொழில் மற்றும் கடற்றொழில் உற்பத்திகள் மூலப்பொருட்களாக அல்லது பகுதியளவிலான தயாரிப்புப் பொருட்களாக உலக சந்தைக்கு சமர்ப்பிக்கப்படுதல் விசேடமாக இனங்காணப்பட்டுள்ளது. இந்த நிலைமையின் கீழ் உலகளாவிய ரீதியில் சந்தையில் காணப்படுகின்ற போட்டிக்கு முகம்கொடுப்பதற்கு அந்த உற்பத்தியாளர்களுக்கும் உற்பத்திகளுக்கும் ஏற்படுகின்ற அசௌகரியங்களின் காரணமாக அதற்கான போட்டி ரீதியிலான விலையைப் பெற்றுக்கொள்ள முடியாமற்போவதன் மூலம் நாட்டிற்கு பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கின்ற பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி இழக்கப்படுகின்றதென்ற வகையில் இப்பிரச்சினை மிகவும் குறிப்பிடத்தக்கதாயுள்ளது.

இந்த நிலைமையினுள் மேற்படி பிரச்சினைக்கு ஏற்புடையதான தீர்வுகளைக் காணுதல் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சிறப்பியல்பானதொரு கடமைப் பொறுப்பாகும். இதன் பொருட்டு மேலே விபரிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளின் ஊடாக அமைச்சினால் புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களில் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கடற்றொழில் அபிவிருத்தி உயர் வலயங்களை (Development Mega Zones) நிறுவுதலை மிகவும் சிறப்பியல்பானதும் முன்னுரிமையளிக்கத்தக்கதுமான நிகழ்ச்சித்திட்டமாக அறிமுகப்படுத்தக்கூடியதாக உள்ளது.
இதற்கமைய கமத்தொழில் துறையில் காணப்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைக் குறிக்கோளாகக் கொண்டு கமத்தொழில் அபிவிருத்தி உயர் வலயங்களை (Agricultural Development Mega Zones) நிறுவுவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, இது "60 மாதங்களில் புதியதொரு நாட்டைக் கட்டியெழுப்புகின்ற ஐந்து வகை செயற்பாட்டு" கொள்கைப் பிரகடனத்தின் மூலமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் "உலக வீட்டுத் தோட்டம்" எனும் தொனிப்பொருளில் 23 கமத்தொழில் அபிவிருத்தி உயர் வலயங்களையும் 10 கடற்றொழில் ஏற்றுமதி அபிவிருத்தி உயர் வலயங்ககளையும் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதோடு 2016 ஆம் ஆண்டில் இத்தகைய 07 உயர் வலயங்களை (05 கமத்தொழில் உயர் வலயங்கள்,02 கடற்றொழில் உயர் வலயங்கள்) நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய ஏற்றுமதித் திசைமுகப்படுத்தப்பட்ட (Export oriented) புதிய விவசாய மற்றும் கடற்றொழில் உற்பத்திகள் மற்றும் சேவைத் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் ஏற்கனவே காணப்படுகின்ற தொழில்முயற்சிகளை விஸ்தரிப்பதற்கும் எதிர்பார்க்கின்ற தொழில்முயற்சியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தேவையான பௌதீக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அரச மற்றும் தனியார்துறையை நட்புறவுடனுன் இணைக்கின்றதான சிறப்பியல்பான வலயங்களாக இந்த அபிவிருத்திப் உயர் வலயங்களைக் குறிப்பிட முடியும்.

**தொலைநோக்கு**

பெறுமதி சேர்க்கப்பட்ட ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதியில் வெற்றிபெற்ற உலகளாவியதொரு சந்தை

**செயற்பணி**

இலங்கையின் ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளின் உற்பத்தித்திறனை உயர்வடையச் செய்தல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஊடாக உலகளாவிய சந்தையில் பிரவேசிப்பதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுதலை அதிகரிக்கச் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினர்களுக்கும் சிறந்த நிலைபேறான வாழ்க்கை நிலையொன்றை உறுதி செய்வதை முன்னிட்டு தேவையான கொள்கைகள், திட்டமிடல்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

**குறிக்கோள்கள்**

மிகப் பாரிய உலகளாவிய சந்தையில் பிரவேசித்து எமது ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகள், கமத்தொழில் மற்றும் கடற்றொழில் உற்பத்திகள், பண்டங்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு போட்டி ரீதியில் அச்சந்தையில் குறிப்பிடத்தக்களவு பகுதியை கைப்பற்றுவதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை 2020 ஆம் ஆண்டளவில் இரண்டு மடங்காக ஆக்குவதற்குப் பங்களிப்புச் செய்தல் (பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுதல்) அமைச்சு நிறுவப்பட்டமைக்கான சிறப்பியல்பான மற்றும் அடிப்படைக் குறிக்கோளாகும்.
மேலும், எதிர்வரும் காலத்தில் இலங்கையினுள்ளும், பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுக்கு மத்தியிலும் உணவு தொடர்பில் உருவாகின்ற அதிக கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு கமத்தொழில் துறையில் இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தை தயார் செய்தல் (அபிவிருத்தி உயர் வலயங்களை நிறுவுவதன் ஊடாக) அமைச்சின் மேலுமொரு குறிக்கோளாகும் என்பதோடு இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு பெரும் உறுதுணையாக உள்ளது.

**கடமைப் பொறுப்பு**

எமது தொலைநோக்கை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள செயற்பணியின் ஊடாகச் சென்று மேற்படி நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் மூலம் ஏற்கனவே திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. பரந்த அளவில் கமத்தொழில் மற்றும் கடற்றொழில் உள்ளிட்ட ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதிச் சங்கிலித் தொடரைப் பலப்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புப் பொருட்களின் உற்பத்திக்காக தரப்பினர்களை ஊக்குவித்தல்.

2. ஆரம்பக் கைத்தொழில் உற்பத்திகளில், குறிப்பாக ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் உள்ளிட்ட ஏற்றுமதிப் பெறுமதியுள்ள ஏனைய பயிர் உற்பத்திகளின் தரத்தை உறுதி செய்வதற்குத் தேவையான நியமங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தலை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகள் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்கல்

3. ஆரம்பக் கைத்தொழில் துறையில் ஈடுபடுகின்றவர்கள், முதலீட்டாளர்கள், விவசாயிகள், சிறு அளவிலான கைத்தொழிலாளர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் உள்ளிட்ட தரப்பினர்களை வலையமைப்பாக்கி மக்கள் கம்பனிகள் போன்ற கூட்டு அமைப்புகளின் ஊடாக மற்றும் தனியார் தொழில்முயற்சியாளர்கள் என்ற வகையில் உலகளாவிய சந்தையுடன் இணைத்தல்

4. உலகளாவிய சந்தையினுள் காணப்படும் போட்டி நிலையை வெற்றிகொள்வதற்காக உயர் உற்பத்தி விளைதிறனைப் பேணிவருவதற்குத் தேவையான வசதிகளை இலங்கை தொழில்முயற்சியாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வர்த்தக கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்

5. உலகளாவிய ரீதியில் போட்டி ரீதியிலான வெளிநாட்டுக் கம்பனிகளுடன் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை தொழில்முயற்சியாளர்களுக்குத் தேவையான ஊக்குவிப்புகளை பெற்றுக்கொடுத்தல்

6. குறிப்பாக கமத்தொழில் மற்றும் கடற்றொழில் அபிவிருத்தி உயர் வலயங்களின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு தமது தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான காணிகளை வழங்குதல் மற்றும் அதற்குத் தேவையான தூண்டுதல்கள் மற்றும் ஊக்குவிப்புகளை பெற்றுக்கொடுத்தல்

7. நவீன தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள், பின் அறுவடைத் தொழில்நுட்பம், விவசாய கடன் உள்ளிட்ட அனைத்து பௌதீக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை புதிய தொழில்முயற்சியாளர்களுக்காக உயர் வலயங்களினுள் உருவாக்குதல்

8. கமத்தொழில் துறையில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையை பேணிவருதல்

9. ஏற்றுமதிப் பயிர்கள், பழச் செய்கை, மலர் செய்கை, உயர் ஏற்றுமதிப் பெறுமதியைக் கொண்ட வேறு பயிர் உற்பத்திகளின் மேம்பாட்டுக்குத் தேவையான வசதிகளை வழங்கல்

இதற்கு மேலதிகமாக மேலே காட்டப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை தொழிற்படுத்துவதற்காக அமைச்சுக்கு உள்ள ஒரே திணைக்களமான ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்திற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கி பின்வரும் நிர்வாக அலுவல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. அமைச்சுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டம் மற்றும் நடுத்தர கால முதலீட்டுத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிப்பதன் ஊடாக தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல் மற்றும் அந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மேற்பார்வை, தொழிற்படுத்தல் மற்றும் முன்னேற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் வருடாந்தத் திட்டம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உதவி மற்றும் வழிகாட்டல்களை பெற்றுக் கொடுத்தல், தொழிற்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள்

3. அமைச்சுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி அரச நிதி முகாமைத்துவத்திற்காக நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் சென்று கணக்கு நடவடிக்கைகளை உரியவாறு பேணிவருதல்.

4. அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக மனித வளம் மற்றும் பௌதீக வள முகாமைத்துவம் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் தாபன நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்.

## அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி

| செயலாளர் | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரிவு | மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | | | மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்தி) | |
| | **நிர்வாகப் பிரிவு** | **நிதிப் பிரிவு** | **உள்ளக கணக்காய்வு பிரிவு** | **திட்டமிடல் பிரிவு** | **அபிவிருத்திப் பிரிவு** |
| பிரிவுத் தலைவர்கள் | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | பிரதான கணக்காளர் | - | பணிப்பாளர் (திட்டமிடல்) | பணிப்பாளர் |
| ஏனைய நிறைவேற்று பதவியணி | உதவிச் செயலாளர், நிர். அலுவலர் | கணக்காளர் | கணக்காளர் | பிரதி/ உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) | பி./உதவி பணிப்பாளர் 02 |
| **அபிவிருத்தி அலுவலர/அபிவிருத்தி உதவியாளர்** | அபிவிருத்தி அலுவலர்கள்/ அபிவிருத்தி உதவியாளர் 16 | | | | |
| முகாமைத்துவ உதவிச் சேவை/ ஏனையவை | முகாமைத்துவ உதவியாளர் 18, புகைப்பட கலைஞர்/உதவியாளர் 03 | | | | |
| உதவிப் பதவியணி | அலுவலக உதவியாளர்/ சாரதி 19 | | | | |

# Organizational Chart of the Ministry



## 2015 ஆம் ஆண்டில் அமைச்சின் முன்னேற்றம்

- **பௌதீக முன்னேற்றம் (2015.09.22 முதல் 12.31 வரை)**

1. அமைச்சின் கீழ் எதிர்வரும் காலத்தில் முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொழிற்படுத்துவதற்குத் தேவையான மனித வளம், பௌதீக வளம் மற்றும் சுற்றாடலை தயார் செய்தல்.

    a. அமைச்சின் நிரந்தர பதவியணிக்கான 62 பதவிகளுடன் கூடிய பணியாட்டொகுதியொன்று அங்கீகரிக்கச் செய்யப்பட்டதோடு, மார்கழி 31 ஆம் திகதியாகின்றபோது அத்தியாவசியமான 28 பதவிகளுக்கு ஊழியர்களை ஈடுபடுத்த இயலுமாயிருந்தது.

    b. நவீன மற்றும் முழுமையான வசதிகளுடன் கூடிய புதியதாரு அலுவலக வளவு பத்தரமுல்லை, சுஹுருபாய புதிய கட்டடத்தில்தாபிக்கப்படல்






    c. ஆரம்ப கைத்தொழில் உற்பத்திகள் (குறிப்பாக ஏற்றுமதி விவசாயப் பயிர்கள்) ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள், வழங்குனர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினர்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு சேவைக் கருமபீடமொன்றை உலக வர்த்தக மத்திய நிலையத்தில் தாபிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

    d. மனித வள அபிவிருத்திக்காக வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்கு 04 உத்தியோகத்தர்களும் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு 03 உத்தியோகத்தர்களும் பங்குபற்றச் செய்வித்தல்.

    **e.** தென் கொரிய அபிவிருத்தியின் அடிப்படையான ‘செமாவுல் உன்டுங்’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டத்தை அமைச்சின் கீழ் பொறுப்பேற்றல்

2. கௌரவ அமைச்சரின் தலைமையில், அமைச்சினதும் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்தினதும் மற்றும் அந்தந்த மாவட்டங்களில் ஏற்றுமதிக் கமத்தொழில் துறையின் தரப்பினர்களதும் பங்கேற்புடன் இத்துறையின் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதற்காக பின்வரும் செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

a. ஏற்றுமதிக் கமத்தொழில் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் எதிர்கால திட்டமிடல்களை தயாரிப்பதற்காக ஏற்புடைய தரப்பினர்களின் பங்கேற்புடன் 2015.09.28 ஆம் திகதி மாத்தளை ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தில் செயலமர்வொன்றை நடத்துதல் மற்றும் மாத்தளை வாசனைத் திரவியங்கள் தோட்டத்தை அவதானிக்கின்ற சுற்றுலாவொன்றை கௌரவ அமைச்சரின் தலைமையில் மேற்கொள்ளல்.





b. கறுவா உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டிருக்கின்ற தரப்பினர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை கலந்துரையாடுதல் மற்றும் அவற்றுக்கு தீர்வு காணுதலும், கறுவா உற்பத்தியின் பெறுமதியை அதிகரிக்கச் செய்து ஏற்றுமதி செய்வதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய செயலமர்வொன்றை கௌரவ அமைச்சரின் தலைமையில் 2015.11.12ஆம் திகதி காலியில் நடத்துதல் மற்றும் காலி சார்ந்த வலயத்தை கறுவா ஏற்றுமதித் தயாரிப்பு வலயமாக மேம்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.





c. மாத்தளை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மிளகு, கராம்பு, சாதிக்காய் ஆகிய பயிர்களின் ஏற்றுமதி சார்ந்த ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய தரப்பினர்களை விழிப்புணர்வூட்டுகின்ற கலந்துரையாடலொன்று கௌரவ அமைச்சரின் தலைமையில் 2015.11.17 ஆம் திகதி முற்பகல் கண்டி கெட்டம்பயில் நடத்துதல் மற்றும் தேசிய வாசனைத் திரவியங்கள் பூங்காவை அவதானித்தல்.




d. குருணாகல் மாவட்டத்தில் பிரதானமான ஏற்றுமதிக் கமத்தொழில் பயிராகக் கருதப்படுகின்ற இஞ்சி, மஞ்சள், வெற்றிலை முதற்கொண்ட ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில்

அந்தப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள பயிர்ச் செய்கையாளர்களுடனும் ஏற்புடைய ஏனைய தரப்பினர்களுடனும் 2015.11.17ஆம் திகதி பிற்பகல் கலந்துரையாடலொன்று கௌரவ அமைச்சரின் தலைமையில் நடத்தப்படுதல்.





e. சனாதிபதி செயலகத்தின் வழிப்படுத்தலின் மூலம் அமுலாக்கப்படுகின்ற உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்றுமதிக் கமத்தொழில் பயிர்களை 40,000 ஏக்கரில் பயிரிடுவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மற்றும் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டல் கௌரவ அமைச்சரின் தலைமையில் நடத்தப்படுதல் .





f. ஏற்றுமதிக் கமத்தொழில் துறையின் எதிர்கால மேம்பாட்டை முன்னிட்டு வாசனைத் திரவியங்கள் பேரவையின் அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கௌரவ அமைச்சரின் அவதானிப்பு






➢ நிதியியல் முன்னேற்றம் (2015.09.22 தொடக்கம் 12.31 வரை)

| நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு (ரூபா) | செலவிடப்பட்ட தொகை (ரூபா) | நிதியியல் முன்னேற்றம் % |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 34,260,000 | 16,868,103 | 49.24 |
| மூலதனச் செலவு | 12,718,149 | 6,647,072 | 52.26 |
| **மொத்தம்** | **46,978,149** | **23,515,175** | **50.06** |

**2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள்**

**2016 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி உத்தேச நிகழ்ச்சித்திட்டங்கள்**

| **நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம்** | **ஒதுக்கப்பட்டுள்ள தொகை (ரூபா மில்.)** |
|---|---|
| மூலதனச் செலவு | 526.15 |
| மீண்டெழும் செலவு | 768.09 |
| தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் (மஞ்சள் மற்றும் இஞ்சிச் செய்கை அபிவிருத்தி) | 50.00 |
| மொத்தம் (ஏ.க.தி. நிதி ஏற்பாடும் உள்ளடங்கலாக) | 1344.24 |

**வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி உத்தேச நிகழ்ச்சித்திட்டங்கள்**

| **நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம்** | **ஒதுக்கப்பட்டுள்ள தொகை (ரூபா மில்.)** |
|---|---|
| விவசாய, கால்நடை வளர்ப்பு மற்றும் கடற்றொழில் தயாரிப்பு வலயங்களை தாபித்தல் | 100.00 |
| ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்தில் கறுவா ஆராய்ச்சிப் பிரிவை வலுப்படுத்தல் | 50.00 |
| கறுவா அபிவிருத்தி அதிகாரசபையை தாபித்தல் | 50.00 |
| கறுவா பயிற்சிப் பாடசாலையை மேம்படுத்தல் | 50.00 |
| கறுவா ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல் | 50.00 |
| விசேட கமத்தொழில் மற்றும் கடற்றொழில் ஏற்றுமதி உயர் வலயங்களைத் தாபித்தல் | 2000.00 |
| ஆரம்பக் கைத்தொழில் பேரவையை தாபித்தல் | - |
| பாக்குச் செய்கை சார்ந்த உற்பத்திகளை வர்த்தகமயப்படுத்தல் | - |
| வர்த்தக பழச் செய்கை மற்றும் மரக்கறிச் செய்கை அபிவிருத்தி | - |
| தொழிலற்ற இளைஞர்கள் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக முதலீட்டுச் சலுகைகளை ஏற்பாடு செய்தல் | - |
| மொத்தம் | **2300.00** |

**புதிய அமைச்சு என்ற வகையில் வெற்றிகொள்ள வேண்டியுள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள்**

- **உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கின்றபோது எதிர்நோக்க வேண்டி நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் தடைகள்**
    - உள்நாட்டு விவசாயிகளை மேம்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்ற இறக்குமதிகள். உதா மஞ்சள் மற்றும் இஞ்சி இறக்குமதிக்கு தீர்வை வரிச் சலுகை வழங்கப்படுதல்

    - உள்நாட்டு உற்பத்திகளின் ஏற்றுமதியின்போது எதிர்நோக்குகின்ற தாவர மற்றும் விலங்கின நோய்த்தடுப்பு வரையறைகள்.

      உதா : புதிய பழங்களை (மாம்பழம் போன்ற) ஏற்றுமதி செய்கின்ற போது காணப்படுகின்ற பிரச்சினை

    - பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தித் தொழிற்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தயாரிப்புக் கைத்தொழில்களை மேம்படுத்துகின்றபோது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

      உதா : தேவையான இயந்திர சாதனங்கள் மற்றும் பொதியிடல்களுக்கான இறக்குமதியின்போது ஏற்புடையதாகின்ற தீர்வை வரி எல்லைகள்.

    - உயர் நற்பெயரைக் கொண்ட இலங்கை உற்பத்திகளுக்கு தரத்தில் குறைந்த உற்பத்திகளைக் கலப்படம் செய்தல் மற்றும் பதிலீடு செய்தல்.

      ஊதா : கழிவுத் தேயிலையை கலப்படம் செய்தல் மற்றும் இலங்கையின் பாக்குக்கு பதிலாக இலங்கையின் பெயரைப் பயன்படுத்தி வேறு நாடுகளின் பாக்கை இலங்கையிலிருந்து மீள் ஏற்றுமதி செய்தல்

    - பெறுமதி சேக்கப்பட்ட உற்பத்திகளுக்குப் பதிலாக தொர்ந்தும் மூலப்பொருட்கள் அல்லது பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகளாக சந்தைக்கு அனுப்புவதற்கு விவசாயிகள், உற்பத்தியாளர்கள் முற்பட்டிருத்தல்.

      ஊதா : கறுவா, மிளகு

    - இலங்கைக்கே தனித்துவமான உற்பத்திகளில் காணப்படும் மருத்துவ குணம் மற்றும் இரசாயன பெறுமதி தொடர்பில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் மிகவும் மந்த கதியில் நடைபெறுதல்.

      உதா- இலங்கைக்கே தனித்துவமான கறுவா தொடர்பில் மேலதிக ஆராய்ச்சிகள் நடைபெறாமை.

- புதிய முதலீட்டாளர்களுக்கு கருத்திட்டங்களுக்காக காணிகள் வழங்கப்படுகின்றபோது உருவாகின்ற பிரச்சினைகள். குறிப்பாக அபிவிருத்தி உயர் வலயங்களுக்காக முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்கப்படுகின்றபோது இப்பிரச்சினை அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

  - குறை பயன்பாட்டுக் காணிகளை அபிவிருத்திப் பணிகளுக்காக பெற்றுக்கொடுக்கின்றபோது, குறித்த காணி உரித்தாயுள்ள அரச நிறுவனம் மற்றும் தனியார் கம்பனி அக்காணியை ஒப்படைப்பதற்கு தயங்குதல்.
  - இவ்வாறு அத்தகைய காணிகளை பெறுவதற்கு நீண்ட காலம் எடுத்தல் மற்றும் சிக்கலான முறையியலொன்றை கடைப்பிடிக்க வேண்டியுள்ளமை.
  - காணி உரித்தாயுள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிடையே காணப்படும் பாதகமான மனப்பாங்குகள்

## அமைச்சின் கீழ் செயற்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

## ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம்

## ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம

### பின்னணி மற்றும் அறிமுகம்

பண்டைய காலம் முதல் இலங்கை வாசனைத் திரவியங்கள் தொடர்பில் புகழ் பெற்றிருந்த போதிலும் அக்கைத்தொழில் தொடர்பில் தேசிய மட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது 1971 தேசிய கமத்தொழில் கொள்கையின் ஊடாகவாகும். அதன் பின்னர் 1972 இல் அமைச்சரவை நிருபமொன்றின்படி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு இணைக்கப்பட்டு சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. 1975 இல் திணைக்களம் கமத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அது வரை திணைக்களத்தின் கடமைப்பொறுப்பாக காணப்பட்ட எல்லைத் தேயிலைக் காணிகளில் வாசனைத் திரவியப் பயிர்களைப் பயிரிடுவதற்குப் பதிலாக உலக உணவு அமைப்பு (WFP) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) மூலம் ஆரம்பிக்கப்பட்ட பயிர் பல்வகைப்படுத்தல் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கடமைப் பொறுப்பில் ஒரு பகுதி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த பயிர்கள் அபிவிருத்தியின் முன்னோடியாக ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் மாறியது.

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் அப்போதிருந்த பெயரை மாற்றி திணைக்களமானது, ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களமாக பெயரிடப்பட்டதோடு, அதன் மூலம் வாசனைத் திரவியங்களைப் போன்றே ஏனைய கமத்தொழில் உற்பத்தி ஏற்றுமதிகளுக்கான சட்ட அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. அன்று முதல் இத்துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் இத்திணைக்களத்தின் மூலம் தொழிற்படுத்தப்படுகின்றது.

இதற்கமைய வாசனைத் திரவியங்கள் துறையில் முதன்மையானதாக மாறி அத்துறையின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் விஸ்தரிப்பை நாடு முழுவதிலும் வலையமைப்பொன்றை தாபித்து துறையிலுள்ள ஏற்புடைய தரப்பினர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் இக்காலகட்டத்தினுள் நடைபெற்றது.

ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களமானது கறுவா, மிளகு, கராம்பு, சாதிக்காய்,ஏலம், கோப்பி, கொக்கோ, பாக்கு, சிற்றினல்லா, வெனிலா, சேர, வெற்றிலை, கொரக்காய், கித்துள், இஞ்சி மற்றும் மஞ்சள் ஆகிய பயிர்களின் ஏற்றுமதி தொடர்பிலேயே முக்கிய கவனம் செலுத்துகின்றது. இதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு, புத்தாக்கங்கள் மற்றும் அதிக விளைச்சலைத் தருகின்ற பயிரினங்களை அறிமுகப்படுத்தல் பிரதானமான பொறுப்பாக உள்ளதோடு, விவசாயப் பயிர் துறையின் மேம்பாட்டை முன்னிட்டு ஆராய்ச்சி, அபிவிருத்திப் பணிகள் மற்றும் விஸ்தரிப்புச் சேவைகளை வழங்கல் தொடர்ந்து நடைபெறுகின்றது. 1972 இல் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த கமத்தொழில் ஏற்றுமதி பயிர்களின் அளவு 7,587 மெற்றிக் தொன்களாக காணப்பட்டதோடு,2015 ஆம் ஆண்டில் இது 71,588.30 மெற்றிக் தொன்களைத் தாண்டுகின்ற அளவுக்கு அதிகரித்துள்ளது. இதற்கமைய முழுமொத்த வெளிநாட்டுச் செலாவணி வருமானம் ரூபா 48.9 மில்லியனில் இருந்து 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 61,558.34 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டளவில் பயிர்ச் செய்கை

செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதிப் பயிர்களின் பரப்பளவு 111,095 ஹெக்ரயார்களாகும் என்பதோடு, அண்ணளவாக 2 மில்லியன் தரப்பினர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இத்துறையில் ஈடுபடுகின்றனர்.

**தொலை நோக்கு**

**விவசாய உற்பத்தி ஏற்றுமதியில் உன்னதநிலை**

**செயற்பணி**

தேசிய தேவைப்பாடுகள் மற்றும் சந்தையை முன்னிட்டு, உள்நாட்டு தேவைப்பாடுகளை உறுதி செய்கின்ற அதேவேளை உற்பத்திப் பெறுமதியைச் சேர்த்து ஏற்றுமதி மற்றும் தேசிய உற்பத்தியைப் பாதுகாத்து மீள் ஏற்றுமதி செய்து ஏற்றுமதிக் கமத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களினதும் நிலைபேறான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி, ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் அளவு ரீதியிலும் தர ரீதியிலுமான மேம்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாட்டை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

**நோக்கங்களும் குறிக்கோள்களும்**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தி நிலைமைகளை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக் கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதன் மூலம் ஏற்றுமதிப் பயிர் துறையை விருத்தி செய்வதற்காக ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஏற்றுமதிக் கொள்ளளவு மற்றும் ஏற்றுமதி வருமானம் ஆகிய இரண்டு துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களமானது, அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக புதிய பயிர்ச் செய்கைகள் மற்றும் மீள் பயிர்ச் செய்கை, உயர் கமத்தொழில் வழக்கங்களை கடைப்பிடித்து தற்போதுள்ள பயிர்ச் செய்கைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் மற்றும் ஏனைய நாடுகளுடன் போட்டியிடக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ள சர்வதேச தர நியமங்கள் மற்றும் வர்த்தக விதிகளைத் தழுவியவாறு உற்பத்திகளின் தரத்தை அதிகரிக்கச் செய்வதற்காக உதவி செய்வதன் மூலம் இத்துறையை விருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. வருமானப் பாதுகாப்பை முன்னிட்டு இருப்பிலுள்ள நுகர்வோர் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு உயர் தரத்திலான உற்பத்திகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. ஏற்றுமதி கமத்தொழில் பயிர்களை பயிரிடல், பதனிடல், பெறுமதி சேர்த்து தயாரிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்தல், வர்த்தகத்தில் இடைத்தரகராக செயலாற்றி வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொள்கின்ற அண்ணளவான இரண்டு மில்லியன்களான தரப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்தல் மற்றும் பலப்படுத்தல் திணைக்களத்தின் பிரதானமான நோக்கமாகும்.

**நிறுவனக் கட்டமைப்பு**

**தலைமை அலுவலகம்**

பேராதனை, கெட்டம்பேயில் தலைமை அலுவலகம் அமைந்துள்ளதோடு, பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கீழ் செயற்படுகின்றது. இதன் கீழ் 14 மாவட்டங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 07 ஆராய்ச்சி நிலையங்களின் இணைப்பாக்கம், மேற்பார்வை, நிர்வாகம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு நடைபெறுகின்றது. வருடாந்தம் அண்ணளவாக ரூபா 1000 மில்லியன் நிதி ஏற்பாடு திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்படுவதோடு, தலைமை அலுவலகத்தில் ஏறத்தாழ 150 அலுவலர்கள் உள்ளிட்ட 1200 பதவியணியினர் சேவையாற்றுகின்றனர்.

**ஆராய்ச்சி நிலையங்கள்**

| | |
|---|---|
| ஏற்றுமதிக் கமத்தொழில் மத்திய ஆராய்ச்சி நிலையம் | - மாத்தளை |
| தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் | - பலொல்பிட்டிய |
| துணைப் பயிர்கள் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் | - நாரம்மல |
| இழைய நடுகை நிலையம் | - வல்பிட்ட |
| உப ஆராய்ச்சி நிலையம் | - குண்டசாலை |
| உப ஆராய்ச்சி நிலையம் | - நில்லம்ப |
| உப ஆராய்ச்சி நிலையம் | - தல்பிட்டிய |
| பொருளாதார ஆராய்ச்சி நிலையம் | - தலைமை அலுவலகம் |

**மாவட்ட அலுவலகங்கள் (14)**

| | |
|---|---|
| மத்திய மாகாணம் | - கண்டி, மாத்தளை, நுவரெலியா |
| சப்பிரகமுவ மாகாணம் | - கேகாலை, இரத்தினபுரி |
| ஊவா மாகாணம் | - மொனறாகலை, பதுளை |
| தென் மாகாணம் | - காலி, மாத்தரை, அம்பாந்தோட்டை |
| மேல் மாகாணம் | - கொழும்பு, கம்பஹா, களுத்துறை |
| வடமேல் மாகாணம் | - குருணாகல் |

**பிரதானமான செயற்பாடுகள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 1992 புராட்டதி 22 ஆம் திகதி 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் மேம்பாட்டுச் சட்டத்தின் மூலம் பின்வரும் கடமைகள் மற்றும் சேவைகளுக்காக ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களத்திற்கு சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை மற்றும் பதனிடலை ஒழுங்கு செய்தல் மற்றும் மேம்படுத்தல்
- பயிர் அபிவிருத்தி, பயிர்ச் செய்கை, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவம் மற்றும் சமூக பொருளியல் தொடர்பிலான விடயத்துடன் இணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
- உயர் தரத்திலான நடுகைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகம்
- பயிர் உற்பத்தி, உற்பத்தித்திறன் மேம்பாடு, தரத்தை விருத்தி செய்தலுடன் தொடர்புடைய ஏற்றுமதி விவசாயப் பயிர் உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- பயிர் பாதுகாப்பு மதியுரைச் சேவைகளை வழங்கல்

- ஒருங்கிணைந்த பீடைகொல்லி முகாமைத்துவ மேம்பாடு
- ஒருங்கிணைந்த தாவர ஊட்ட முகாமைத்துவ மேம்பாடு
- சேதனப் பயிர்ச் செய்கை மேம்பாடு, சந்தைப்படுத்தல், தர நியமம் மற்றும் விலைகள் ஆகியன பற்றிய தரவுகளை வெளியிடல்
- ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் மற்றும் நடுகைப் பொருட்கள் இறக்குமதியின் கட்டுப்பாடு
- ஏற்றுமதி விவசாயப் பயிர உற்பத்தி, பதனிடல், சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கான பயிற்சி
- பெருந்தோட்டத் துறையினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் மேம்பாட்டுக்கான மதியுரைச் சேவைகளை வழங்கல்
- ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பை பலப்படுத்தல்
- 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதிக் கமத்தொழில் சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தை ஒப்படைத்தல்
- ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் சார்ந்த கொள்கை விடயங்கள் தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கல்
- தொழில்நுட்ப மாதிரிகளைப் பேணிவருதல்

**2015 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்**

- திணைக்களத்தின் உற்பத்தித்திறனை உயர்வடையச் செய்யும் நோக்கத்துடன் பிரிவுகளுக்கிடையில் உற்பத்தித்திறன் தர வட்டங்களை தாபித்து உற்பத்தித்திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கடிதக் கோப்புகளை முறைசார்ந்த விதத்தில் தயார்படுத்தல் ஊடாக திணைக்களத்தின் அலுவல்களை அதிக வினைத்திறன்மிக்கதாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், இலங்கை மன்றக் கல்லூரி ஆகிய பல்வேறு நிறுவனங்களின் கீழ் 83 அலுவலர்கள் பயிற்சிகளில் பங்குபற்றச் செய்யப்பட்டனர்.

- இலங்கை விஞ்ஞான சேவையின் உதவிப் பணிப்பாளர் பதவியொன்றின் வெற்றிடம் நிரப்பப்பட்டது.

- திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் iii ஆம் தர விஸ்தரிப்பு உத்தியோகத்தர் பதவிகள் 23 க்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.

- ஒருங்கிணைந்த சாரதிகள் சேவையில் 10 பதவி வெற்றிடங்களுக்கு புதிய ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.

- 2015 ஆம் ஆண்டினுள் முழுமொத்த நிதி ஏற்பாட்டில் 99மூ செலவிடப்பட்டது.

- மூலதனச் செலவுகள் மற்றும் மீண்டுவரும் செலவுகளின் செயலாற்றுகையை 99% வரை அதிகரிக்க முடியுமாயிருந்தது.